**கொழும்பு பெரும்பாக நகர அபிவிருத்திச் செயற்திட்டம் - 2018**

---

கொழும்பு பெரும்பாக நகர அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2012 மே 18 ஆந் திகதிய 8145-எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 2 ஆம் பட்டோலையின் II (பீ.3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் நகர அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் கொழும்பு மாநகர சபை என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாகவும் உள்ளன. கொழும்பு நீர்வடிநில வடிகாண்களில் வெள்ளம் ஏற்படுவதனைக் குறைத்தல், கொழும்பு தலைநகர் பிரதேசத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளின் இயலுமையினை வலுப்படுத்தல், தெரிவுசெய்யப்பட்ட செயன்முறை விளக்க முதலீடுகள் ஊடாக உள்ளூர் உட்கட்டமைப்பு வசதிகளையும் சேவைகளையும் மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 42,031.74 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 321 மில்லியனானதுடன் அதில் ரூபா 27,890.22 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 213 மில்லியன் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியினால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 14,141.52 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2012 யூலை 10 ஆந் திகதி தொடங்கியிருந்ததுடன் 2017 யூன் 30 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தி செய்தல் திகதி 2020 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

---

செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

(அ) மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

(ஆ) சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

(இ) பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

(ஈ) வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவ கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2016 மார்ச் 24 இன் 1/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் போது செயற்திட்ட வழிகாட்டல் குழுவின் 2 கூட்டங்கள் மாத்திரம் நடைபெற்றிருந்தது. | செயற்திட்டத்தின் பௌதீக செயலாற்றல் தொடர்பான பலவீனமான கண்காணிப்பு பொறிமுறை | மீளாய்வாண்டின் போது தவிர்க்க முடியாத காரணங்களினால் 2 கூட்டங்கள் மாத்திரம் நடைபெற்றது. | சுற்றறிக்கையின் தேவைப்பாடுகள் பின்பற்றப்படுதல் வேண்டும். |
| (ஆ) | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் III – ஆ பிரிவு | உரிய பிரமாணத்திற்கு முரணாக ரூபா 7.32 மில்லியன் தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி மற்றும் பிடித்து வைத்தல் வரிகள் செயற்திட்டத்தால் செலுத்தப்பட்டிருந்தன. | கடன் பெறுகைகள் முறையற்று கையாளப்படுதல் | மதியுரையாளருக்கு மேற்கொள்ளப்பட்ட நேரடிக் கொடுப்பனவுகளுடன் தொடர்புபட்ட இவ் வரிகள் உள்ளூர் நிதியங்களிலிருந்து தீர்ப்பனவு செய்யப்பட முடியாது. | கடன் முகவர் மற்றும் வெளிநாட்டு வழங்கல் திணைக்களத்துடன் கலந்துரையாடப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம்**

கொழும்பு பெரும்பாக பிராந்தியத்தில் வெள்ளம் மற்றும் வடிகாண் முகாமைத்துவம் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கு துணைபுரிதல் ஆகிய இரண்டு கூறுகளின் 56 நிர்மாண ஒப்பந்தங்களின் கீழ் அமுல்ப்படுத்தப்படுவதற்கு செயற்திட்ட நடவடிக்கைகள் பட்டியலிடப்பட்டிருந்தன. அதில் 38 நிர்மாண ஒப்பந்தங்களின் கீழான வேலைகள் மாத்திரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 1 மாதம் தொடக்கம் 10 மாதங்கள் வரையான காலதாமதங்களுடன் ரூபா 10,335 மில்லியன் கிரயத்தில் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| செயற்பாடு | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக செயன்முன்னேற்றம் | | விளைவு | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்டது | அடைந்தது | | | |
| | % | % | | | |
| மதிவெல கிழக்கு திசைதிருப்பல் திட்டம் - III இற்கான முன்னேற்றங்கள் | 100 | 52 | குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் அக்கறையுடையோருக்கு எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் கிடைக்காது | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | அக்கறையுடையோருக்கு நலன்கள் கிடைக்கக்கூடியவாறு தாமதங்கள் இன்றி முன்னரே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| சென் செபஸ்ரியன் வடக்கு லொக் கேற்ஸ் மற்றும் பம்பி நிலையத்தின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் | 63 | 43 | | | |
| புதிய முகத்துவாரம் மற்றும் ரொறிங்ரன் சுரங்கத்தின் வடிமைப்பு மற்றும் நிர்மாணம் | 13.5 | 11 | | | |

| | | |
|---|---|---|
| மேற்கு பெய்ர ஏரியின் வெஸ்ரேன் வங்கியுடன் சேர்ந்த லீனியர் பூங்காவின் நிர்மாணம் - கட்டம் III | 62 | 37 |
| அம்பத்தலே ஸ்ரோம் நீர் பம்பி நிலையத்தின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் | குறிப்பிடப் பட்டிருக்க வில்லை | கருத்துரை வழங்கப்பட் டிருக்கவில் லை |
| நொறிஸ் கனலிற்கான முன்னேற்றங்கள் | 10 | 06 |
| கொலன்னாவ கனல் திசைதிருப்பல் திட்டம் கட்டம் - II | 85 | 37 |
| கொலன்னாவ கனல் திசைதிருப்பல் திட்டம் கட்டம் - III | குறிப்பிடப் பட்டிருக்க வில்லை | கருத்துரை வழங்கப்பட் டிருக்கவில் லை |
| கோட்டை ரம்பாத்திலுள்ள உயிரியல் டைவர்சிற்றி பூங்காவின் அபிவிருத்தி | குறிப்பிடப் பட்டிருக்க வில்லை | கருத்துரை வழங்கப்பட் டிருக்கவில் லை |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவ கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| **(அ) பெய்ர ஏரியுடன் சேர்ந்த லீனியர் பூங்காவின் நிர்மாணம் - கட்டம் II**<br>ரூபா 343.45 மில்லியன் தொகையான அதன் மீதான பொறியியலாளர் மதிப்பீட்டிற்கு பதிலாக ரூபா 294.15 மில்லியன் கிரயத்தில் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும் உரிய வேலைகள் ரூபா 157.72 மில்லியன் கிரயத்தில் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. மேலும் ரூபா 9.75 மில்லியன் கிரயத்தில் மதிப்பிடப்பட்ட வேலைகள், வேலையின் நோக்கொல்லையில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக பின்னர் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. எனினும் ரூபா 47.9 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் ஆரம்ப பொறியியலாளர் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு ஒப்பந்ததாரருக்கு விடுவிக்கப்பட்டிருந்தன. | மேலதிக வேலை ஆரம்பிப்பு முற்பணங்களை விடுவிப்பதன் ஊடாக மேலதிக நிதி இலாபங்களை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் அனுமதிக்கப்பட்டிருந்தது. | ஆரம்பப் பொறியியலாளர் மதிப்பீட்டிலுள்ள முன்மொழியப்பட்ட நிர்மாண வேலைகள் சில தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் அமுல்படுத்தப்பட்ட ஏனைய செயற்திட்டங்கள் காரணமாக மாற்றப்பட வேண்டியிருந்தன. மேலும் Floating Wetland, Geo Cell Malt போன்ற வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காததால் ரூபா 70 மில்லியன் கிரயத்தில் மதிப்பிடப்பட்ட வேலைகள் மீளப் பெறப்பட்டிருந்தன. எனினும் பொது நிபந்தனையின் 126 ஆவது உட்பிரிவின் பிரகாரம் இலாபத்தின் நட்டத்தை கோருவதற்கான ஒப்பந்தரீதியான கடப்பாட்டை ஒப்பந்ததாரர் கொண்டிருக்கவில்லை. | வேலைகளின் நோக்கொல்லைகளைத் தீர்மானிப்பதற்காக ஏனைய நிறுவனங்களுடன் நல்லுறவைப் பேணுவதற்கும் சரியான முறையில் மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(ஆ) ரொறிங்ரன் சுரங்கம் மற்றும் புதிய முகத்துவாரம் சுரங்க வடிவமைப்பு மற்றும் கட்டிட செயற்திட்டம்**

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | முகத்துவாரம் மற்றும் ரொறிங்ரன் சுரங்கத்தின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் தொடர்பான ஒப்பந்தம் 2018 மே 30 இல் ஐ.அ.டொலர் 32.09 மில்லியன் மற்றும் ரூபா 246.06 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்டு 2 ஆண்டு காலப்பகுதியினுள் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் 2018 திசெம்பர் 31 வரையிலும் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதில் தாமதம் ஏற்படும் சாத்தியத் தன்மை | புதிய முகத்துவாரம் மற்றும் ரொறிங்ரன் சுரங்க வடிவமைப்பு மற்றும் நிர்மாண செயற்திட்டத்திற்காக ஒப்பந்ததாரர் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படும் காலப்பகுதிக்கு பாதிப்பு ஏற்படாமல் திருத்தியிருந்தனர். மேலும் நில அளவைத் திணைக்களத்தின் உறுதிப்படுத்தலுடன் தற்போது பூர்த்திசெய்யப்பட்டிருந்த வடிவமைப்பு செயன்முறையின் நேர நுகர்வு மற்றும் பிரதான முற்தேவைப்பாடு என்பன நிலத்தொழில்நுட்ப புலனாய்வின் கீழான வேலைகள் ஆகும். | தாமதங்களை மேவுகை செய்வதற்கு கைப்பற்றல் செயற்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) | ரொறிங்ரன் மற்றும் முகத்துவாரம் சுரங்கத்தின் நிர்மாணம் தொடர்பாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 13.5 சதவீத பௌதீக இலக்கு அடையப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 11 சதவீத செயன்முன்னேற்றம் மாத்திரம் அத் திகதியில் உள்ளவாறு அடையப்பட்டிருந்தது. செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு ஒப்பந்த நிபரந்தனையின் 8.4 ஆம் உட்பிரிவின் பிரகாரம் ஒப்பந்ததாரரிடமிருந்து திருத்தப்பட்ட வேலை நிகழ்ச்சித்திட்டத்தைப் | செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்திசெய்வதில் தாமதங்கள் காணப்படுதல் மற்றும் ஒப்பந்த காலப்பகுதியை நீடிப்பதற்கான சாத்தியத்தன்மை | முறையாக கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | திருத்தப்பட்ட வேலைத்திட்டத்தை ஒப்பந்ததாரரிடமிருந்து உடனடியாக கோருதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | |
| (iii) | ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனைக் குறிப்பின் 06 ஆம் உட்பிரிவிற்கு முரணாக மாதாந்த செயன்முன்னேற்ற அறிக்கைகள் இணங்கப்பட்ட மாதிரியில் மதியுரையாளரால் தயாரிக்கப்பட்டு செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக செயன்முன்னேற்ற அறிக்கை தரமானதாக சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் வேலை நிகழ்ச்சித்திட்டத்துடன் ஒப்பீடு செய்யப்பட முடியாதிருந்தது. | செயற்திட்ட கண்காணிப்பு நடவடிக்கைகள் செயற்திறனாக மேற்கொள்ளப்படாமை. | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்ட மாதிரியில் செயன்முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட வேண்டியதுடன் உரிய நேரத்தில் தீர்மானம் எடுப்பதற்கு தொடர்புபடுத்தப்பட வேண்டும். |
| (iv) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதியுரையாளரின் மாதாந்த செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 102 அத்தகைய அறிக்கைகளின் 3 வடிவமைப்பு நிலைமை அறிக்கைகள் மாத்திரம் அத் திகதியில் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. எனினும் காலரீதியான அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கான மதியுரையாளர்கள் கடப்பாடுகளை கருத்தில் கொள்ளாமல் வெளிநாட்டு மதியுரையாளர் நிறுவனம் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 333,564 செலுத்தப்பட்டிருந்தது. | பௌதீக செயன்முன்னேற்றத்தை கருத்தில்கொள்ளாமல் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் | பொறியியலாளர் வடிவமைப்பு வரைபடத்தை சமர்ப்பித்தல் மாத்திரம் வடிவமைப்பு செயற்பாட்டின் வெளியீடாக உள்ளதுடன் தேவையான தொழில்நுட்ப கட்டளையின் பிரகாரம் தர்க்கரீதியாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய மிகவும் காலமெடுக்கும் செயன்முறை ஒன்றாகும். | வடிவமைப்பு வேலைகள் கவனமாக ஒன்றிணைக்கப்பட வேண்டியதுடன் அவை தொடர்பான செயன்முன்னேற்றம் மதிப்பிடப்பட வேண்டும். |
| **(இ)** | **பெய்ர ஏரியுடன் சேர்ந்த லீனியர் பூங்கா நிர்மாணம் - கட்டம் I** | | | |
| (i) | ரூபா 184.26 மில்லியன் கிரயத்தில் ஒப்பந்தம் | (அ) வடிவமைப்பு வேலைகளை | கொழும்பு நகரத்தினுள் அமுல்படுத்தப்பட்ட | உரிய செயற்திட்டங்களால் |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 142.72 மில்லியன் கிரயத்தில் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. செயற்திட்டத்தின் கீழான அதிகமான வேலைத்திட்டங்கள் கொழும்பு நகரத்தினுள் அமுல்படுத்தப்பட்ட ஏனைய மெகா செயற்திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்ததால் வேலையின் நோக்கெல்லை குறைக்கப்பட்டிருந்தது. | மேற்கொள்ளும் நேரம் மற்றும் கிரயம் வீணாகும் சாத்தியத்தன்மை<br><br>(ஆ) வேலை ஆரம்பிப்பு முற்பணங்களை விடுவித்தல் தொடர்பாக நிதி இலாபங்களைப் பெறுவதற்கு ஒப்பந்ததாரருக்கு வாய்ப்புக்கள் அனுமதிக்கப்படுதல். | ஏனைய மெகா செயற்திட்டங்கள் காரணமாக பல கட்டமைப்பு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தன. | மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் தன்மையை விளங்கிக் கொள்வதற்கு ஏனைய செயற்திட்ட அமுல்படுத்தல் முகவர்களுடன் சிறந்த உறவைப் பேணுதல் வேண்டும். |
| (ii) | 14.3.7 ஆம் இலக்க ஒப்பந்த குறிப்புரையின் பிரகாரம் ஒப்பந்ததாரரால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய நில வடிமைப்பு பராமரிப்பு கையேடு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 21.58 மில்லியன் கிரயத்தில் மேற்கொள்ளப்பட்ட நில வடிவமைப்பு வேலைகளைப் பேணுதல் ஆபத்தான நிலையில் காணப்படுதல் | ஒப்பந்த ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட கடப்பாடுகளுக்கு இணங்க ஒப்பந்ததாரருக்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. | கடப்பாடுகளை எதிர்கொள்வதற்கு ஒப்பந்ததாரர் கவனம் செலுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 கள விஜயங்களின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவ கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| **(அ)** | **பெய்ர ஏரியுடன் சேர்ந்த லீனியர் பூங்கா நிர்மாணம் - கட்டம் II** | | | |
| (i) | மதியுரையாளர்களின் பரிந்துரைகளின் பிரகாரம் பூங்காவிலுள்ள இருக்கைகளிற்கு மருதமரம் அல்லது தேக்குமரம் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் ரூபா 7.90 மில்லியன் கிரயத்தில் இருக்கைகளை அமைப்பதற்காக ஏனைய வெவ்வேறு மரங்கள் பயன்படுத்தப்பட்டிருந்ததை அரச மரக் கூட்டுத்தாபனத்தால் | அமைக்கப்பட்ட இருக்கைகள் குறிப்புரைகளுடன் இணங்கியிருக்காததுடன் இருக்கைகளின் ஆயுட்காலம் சந்தேகத்திற்கிடமாக உள்ளது. | பரிசோதனை அறிக்கைகளின் பிரகாரம் மாதிரிகளுக்காக பயன்படுத்தப்பட்ட மரத்தின் வகை Suriyamara ஆகக் காணப்பட்டது. | குறிப்புரைகளுடன் இணங்க வேண்டியதுடன் பொருட்களின் நீடிப்புத்தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | பரீட்சிக்கப்பட்ட மாதிரிகள் உறுதிப்படுத்தியிருந்தன. | | | |
| (ii) | தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிக்கைகளின் பிரகாரம் ரூபா 4.44 மில்லியன் கிரயத்தில் மதிப்பிடப்பட்ட 1,380 சதுர மீற்றர்களிற்கு பயன்படுத்தப்பட்ட இணைக்கற்கள் குறிப்புரைகளில் சுட்டிக்காட்டப்பட்ட தேவையான தடிப்பு தன்மையுடன் இணங்கியிருக்கவில்லை. | செயற்திட்ட நடவடிக்கைகளின் நோக்கங்கள் நிலைபேறான அடிப்படையில் அடையப்பட்டிருக்காமை. | கருத்துரை முறையாக வழங்கப்பட்டிருக்கவில்லை. | குறைபாடுகளைக் குறைப்பதற்கும் அதற்கிணங்க கொடுப்பனவுகளை சீர்செய்வதற்கும் ஒப்பந்ததாரர்கள் அறிவுறுத்தப்பட வேண்டும். |
| (iii) | குறிப்புரைகளால் தேவைப்படுத்தப்பட்டவாறு Visual Barriers மற்றும் Picnic tables என்பவற்றிற்கு கனரக GI குழாய்கள் பயன்படுத்தப்பட்டிருக்காதது டன் ரூபா 8.99 மில்லியன் தொகை அதன்மீது செலுத்தப்பட்டிருந்தது. | - மேற்படி - | ஒப்பந்தக் குறிப்புரைகளின் பிரகாரம் இந் நோக்கத்திற்காக கனரக GI குழாய்கள் பயன்படுத்தப்பட்டிருக்காத மை இனங்காணப்பட்டிருந்தது. இவ் விடயத்தை சீர் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக கட்டுப்பாடுகளை பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | **பெய்ர ஏரியுடன் சேர்ந்த லீனியர் பூங்கா நிர்மாணம் - கட்டம் I** | | | |
| (i) | பயன்படுத்தப்பட்ட பலகையின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கு பரீட்சிப்பு அறிக்கைகள் பெறப்படாமல் மேற்கொள்ளப்பட்ட மர வேலைகளுக்காக ரூபா 1.80 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | மர வேலைகளின் நீடிப்பு தன்மை உறுதிப்படுத்தப்படாமை. | ஒப்பந்ததாரரால் அங்கீகரிக்கப்பட்ட பலகை மாதிரிகளின் பிரகாரம் இருக்கைகளிற்காக மரப் பாகங்கள் பொருத்தப்பட்டிருந்தன. | கொடுப்பனவுகளைத் தீர்ப்பதற்கு முன்னர் பரீட்சிப்பு அறிக்கைகள் பெறப்பட வேண்டியதுடன் அவை தொடர்பான உள்ளக கட்டுப்பாடுகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (ii) | ரூபா 4,822.50 மில்லியன் கிரயத்தில் வெள்ளம் மற்றும் வடிகாண் முகாமைத்துவ கூறின் கீழ் அமுல்படுத்தப்பட்ட உப | செயற்திட்டத்தால் அங்கீகரிக்கப்படாத வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டமை. | 2018 ஒக்தோபரில் அரசியல் ஸ்திரமற்ற தன்மை காரணமாக அமைச்சரவை அங்கீகாரம் | பிரமாணங்களுடன் இணங்குவதற்கும் உரிய அதிகாரிகளிடமிருந்து அங்கீகாரங்களை |

| | | | | |
|---|---|---|---|---|
| | செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வேலைகளுக்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | | பெறமுடியாதிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டில் உரிய அங்கீகாரம் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பெறுவதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | உப செயற்திட்டங்களின் கீழ் பல்வேறுபட்ட வகைகளின் கீழ் 120 வேலைகள் மற்றும் பொருட்களின் விடயங்கள் தொடர்பான பெறுகை நடைமுறைகள் 10 மாதங்களுக்கும் அதிகமான தாமதத்துடன் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட நடவடிக்கைகளின் சுமுகமான தொழிற்பாடுகளை நேரடியாக பாதித்திருந்தது. | செயற்திட்டத்தின் பௌதீக செயலாற்றல் பாதகமாக தாக்கமளித்திருந்தது. | ஒப்பந்தங்களில் சில சிக்கலான தன்மை காரணமாக, அவற்றின் பெறுகை செயன்முறைக்கு நீண்டகாலம் எடுத்திருந்தது. | செயற்திட்டத்தின் நோக்கங்களினை அடைந்து கொள்வதற்கு பெறுகை செயற்பாடுகளின் செயன்முன்னேற்றத்தினை கண்காணித்து மதிப்பிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (iv) | 11 உப செயற்திட்டங்களின் கீழ் பூர்த்திசெய்யப்பட்ட வேலைகள் 2018 திசெம்பரில் உள்ளவாறு 01 தொடக்கம் 2½ ஆண்டுகள் வரையான வீச்சிலான தாமதங்களுடன் வேலைத்தளங்களுக்குக் கையளிக்கப்பட்டிருந்தது. | அக்கறையுடைய தரப்பினர்கள் எதிர்பார்த்த நலன்களினை உரிய நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியாது போகும். | ஒப்பந்ததாரரினால் வேலைகளினை கையளிப்பதிலுள்ள தாமதங்கள் தொடர்பில் தாமதக் கட்டணத்தினை அறவிடுவதற்கு செய்திட்டம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒப்பந்ததாரர்களின் வேலைகளின் செயன்முன்னேற்றம் உரிய நேரத்தில் மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம் தொடர்பான விடயங்கள்

செயற்திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் நிலமைகளினை மிகைத்து தாழ்ந்த தரங்களுக்காக உத்தியோகத்தர்களினை ஆட்சேர்ப்புச்செய்யும் அதேவேளை, பிரதி / சிரேஷ்ட செயற்திட்ட பணிப்பாளர், நிபுணர்கள், சிரேஷ்ட பொறியியலாளர்கள் மற்றும் கட்டிடக் கலைஞர்கள் போன்ற செயற்திட்ட கண்காணிப்பு அலகின் முக்கிய முகாமைத்துவ பதவிகளின் பதவிகள் வழமையாக தொடர்ந்தும் வெற்றிடமாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இது செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு உரிய நேரத்தில் ஒப்படைக்கப்பட்ட செயற்பாடுகளினை பூர்த்திசெய்வதற்கு செயற்திட்டத்தின் சுமுகமான தொழிற்பாடுகளினை பாதித்திருந்தது.

**3.5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

| விபரம் | விளைவு | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| Real-time Integrated Flood Management System இன் ரூபா 29.71 மில்லியன் பெறுமதியுடைய மொத்த சொத்துக்களில், ரூபா 2.74 மில்லியன் பெறுமதியுடைய முறைமையின் நிலையான சொத்துக்களின் பகுதியொன்று மாத்திரம் மிளாய்வாண்டின் போது பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கணக்கீட்டுத் தத்துவங்களின் தவறான பிரயோகம் | எதிரிணை நிதிகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் செயற்பாட்டு செலவினங்களில் கணக்கிடப்பட்டு செயற்திட்டத்தின் நிலையான சொத்துக்களாக பதிவு செய்யப்பட்டு பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தன. | கணக்கீட்டு நியமங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும். |